# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | தமிழ் இலக்கிய நயம் - I<br>Appreciation of Tamil Literary Texts I | நேரம் :-<br>1மணித்தியாலம் |
| சுட்டெண்:.............................. | 48 \| T \| I | |

**கவனிக்க:**

❖ **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

01. $(i)$ **தொடக்கம்** $(v)$ **வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

$(i)$ “அரசதிகாரத்தின் அநீதி சிதறச் சிலம்பறைந்து முழங்கிய கோதையைப் போற்றுவோம்”

அ. கோதை எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?

.................................................................................................................................................

ஆ. அரசதிகாரம் என்பது எதனைக் குறிக்கிறது?

.................................................................................................................................................

$(ii)$ “பிள்ளைமீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை
பூவாளி உள்ளரிக்கச் சோர்ந்தான் உயிர்”

அ. நாடன், திருமடந்தை எனச் சுட்டப்படுவோர் யாவர்?

.................................................................................................................................................

ஆ. பூவாளிகள் எவை?

.................................................................................................................................................

$(iii)$ “வெளிநாடு போன பர்த்தாவை நினைத்து உருகிக் கனவுகள் சுமந்த கண்களால் வினா எழுப்பும் ஒற்றைக் குயில்கள்”

அ. பர்த்தா என்பதன் பொருள் யாது?

.................................................................................................................................................

ஆ. இதிலுள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................................

$(iv)$ “ஒரு மாபெரும் சங்கடத்திலிருந்து மீண்ட உணர்வில் உற்சாகம் வரவழைத்து வேகமாக மிதிக்கிறேன். கிழவியும் பாத்துமாவும் மனக் கண்ணில் நிர்தாட்சண்யமாய் நிழலாடினர்”

அ. நிர்தாட்சண்யமாய் நிழலாடினர் என்றால் என்ன?

.................................................................................................................................................

ஆ. ‘உற்சாகம் வரவழைத்து’ என்ற தொடரினால் உணர்த்தப்படுவது யாது?

.................................................................................................................................................

$(v)$ “பழங்காலத்தில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் வெவ்வேறாக இருந்தார்கள். இக்காலத்தில் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற நிலைமை உள்ளது.”

அ. பழங்காலம் - தற்காலம் இரண்டுக்குமான வேறுபட்ட நிலைகள் யாவை?

.................................................................................................................................................

ஆ. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என தன் பாடலில் பாடியவர் யார்?

.................................................................................................................................................

(5 x 4 = 20 புள்ளிகள்)

02. **கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஏன் இப்படிப் பேசுகிறாய். யாரிடம் என்ன பேசுகிறாய் மகளே. எனக்கா காதலைத் தெரியாது. பாறைகளுக்குள் ஒளிந்திருக்கும் சுனை நீரின் ஊற்றைப்போல, அக்காதல் நினைவுகள் இன்றும் என் ஆழ்மனத்துள் சுரந்து கொண்டுதான் இருக்கின்றன.

உனக்குத் தெரியுமா மகளே, என் மூதாதையர் நாக நாட்டைச் சேர்ந்தவர்கள். போரில் வெல்லப்பட்ட அவர்கள், உழுநிலத்தின் பொது நீக்கி, வேள்வி நடத்தும் மறையோர்களுக்குத் தானமாய் அளிக்கப்பட்ட வேள்விக் குடியெனும் பாண்டிய நாட்டு கிராமத்திற்கு அடிமைகளாக விற்கப்பட்டனர். எம் பாட்டன் காலத்தில் ஒரு மன்னன், வேள்விக்குடி மறையோர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்ட நிலஉரிமையை ரத்துச் செய்து மீண்டும் உழுநிலத்தைப் பொதுவாக்கிக் கொத்தடிமைகளாய் இருந்த அவர்களை விடுவித்தான்.

விடுவிக்கப்பட்ட ஒரு சில குடும்பத்தினர் மதுரைக்குப் புலம் பெயர்ந்தார்கள். வயலுக்கு நீர் அளந்து விடுவதில் வல்லவனும் நீர்க்காரனுமான என் பாட்டன், பெருநிலம் கடக்கும் வணிக ஊர்திகளின் கோல்காரனானான். என் மூதாய் சமையற்காரியானாள்.

மழைக்காலம் முழுவதும் மதுரையிலிருப்போம். மற்றப் பருவத்தில் வணிகப் பொதிகளோடு பெருநிலப் பயணந்தான்.

அப்படி ஓர் பயணவழியில் தான் நான் பிறந்தேனாம்.

என் தாய்வழிப்பாட்டியின் கைப்பக்குவம் என் சமையலில் இருப்பதாக எல்லோரும் சொன்னார்கள். நான் சமைக்கும், உலர் மீன் பாகருக்கும் ஊன்துவை அடிசிலுக்கும் மயங்கிய ஒரு கோல்காரன் என் பின்னே சுற்றிச் சுற்றி வந்தான். அவனுக்கு என்னை அளித்தேன். நாமிருவரும் ஈருடல் ஓருயிராய் வாழ்ந்தோம். நிலவற்ற ஓர் இரவில் திடீரெனப் பெருங்கூச்சல். கள்வர்கள் கூட்டமொன்று எங்களைத் தாக்கத் தொடங்கியது. என் காதல் கொழுநன் வாள் வீசுவதில் வல்லான், சுதாகரித்துக் கொண்ட அவன் கள்வர்களை எதிர்த்துத் தாக்கினான்.

$(i)$ காவற் பெண்டின் மூதாதையர் அடிமையாக்கப்பட்டது எவ்வாறு? விடுவிக்கப்பட்டது எவ்வாறு?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(4 புள்ளிகள்)

$(ii)$ உலர்மீன்பாகர், ஊன்துவைஅடிசில் எனக் குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் யாவை?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(4 புள்ளிகள்)

$(iii)$ தன் காதலினை இன்னும் மறக்கவில்லை என்பதை காவற்பெண்டு வெளிப்படுத்தும் முறையிலுள்ள நயம் யாது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(6 புள்ளிகள்)

$(iv)$ நாகநாட்டினர் அடிமை நிலையில் விடுவிக்கப்பட்ட பின்னர் யாது செய்தனர்?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(6 புள்ளிகள்)

**அல்லது**

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! - தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் ‘கிறுக் கிறுக்’ கோசையிலே - நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

$(i)$ மலையகப் பெண்களின் தொழில் ஆர்வம் எவ்வாறு வெளிப்படுகிறது?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(4 புள்ளிகள்)

$(ii)$ மலைவாழ் பெண்கள் அடையும் துயரம் எத்தகையது?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(4 புள்ளிகள்)

$(iii)$ விடுதலை பற்றிய எண்ணக்கரு வெளிப்படுத்தப்படும் விதங்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(6 புள்ளிகள்)

$(iv)$ இதிலுள்ள உருவக அணிகளை இனங்கண்டு விளக்குக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(6 புள்ளிகள்)